செ.வெ.எண்:30/ ஜுன் /2020 **பத்திரிக்கை செய்தி** நாள்:09.06.2020

கொரோனா வைரஸ் நோய் தொற்று, காய்ச்சல், இருமல் மற்றும் சுவாசக் கோளாறுகளோடு உயிரிழப்பை ஏற்படுத்தும் விதமாக உலகம் முழுவதும் பரவி வருகின்றது. திருச்சிராப்பள்ளி மாவட்டதத்தில் இதுவரை 116 நபர்கள் இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டவரில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்நோய் பரவுதலை தடுக்கும் பொருட்டு மாவட்ட நிர்வாகம் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. நோய் பாதித்த பகுதிகளில் இருந்து மாவட்டத்திற்குள் வருகை புரிந்தோர், நோய் தொற்று பாதித்தவருடன் தொடர்பில் இருந்தோர், மற்றும் நோய் தொற்று அறிகுறிகளோடு மருத்துவமனைகளில் இருந்து சிகிச்சை முடிந்து வீடு திரும்பியோர், 14 நாட்கள் வீட்டில் கட்டாயமாக தனிமைப்படுத்திக் கொள்ள அறிவுறுத்தப்பட்டு தொடர் கண்காணிப்பில் உள்ளனர். அவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டவர்கள் வீட்டிலிருந்து வெளியில் வருவதை தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மீறுவோர் மீது காவல்துறையின் மூலமாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுமக்கள் அரசு அறிவிக்கும் வழிமுறைகளை பின்பற்றி தங்களை நோய் தொற்றிலிருந்து தங்களை பாதுகாத்து கொள்ளுமாறும் நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்கு அரசிற்கு முழு ஒத்துழைப்பு அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**